## பக்தியை வைத்து பகை வளர்க்கக் கூடாது – சனாதனம் என்பதல்ல இறைக் கொள்கை!

# மதக் கலவரம் நடக்க விடாமல் தடுக்க சக்கர வியூகத்தை உருவாக்கியவர் முதலமைச்சர்!

## எழும்பூரில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களுக்குப் பேட்டி!

சென்னை, டிச.7–

1920, 1930, 1996, 2014, 2017 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகள் அனைத்தும், 100 ஆண்டுகளுக்கும் மேலாக விளக்கேற்றப் படும் வழக்கமான இடத்திலேயே இந்நிகழ்வு நடக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

பக்தியை வைத்து பகை வளர்க்க கூடாது, சனாதனம் என்பதுதான் இறைக்கொள்கை சனாதனம் என்பதல்ல இறைக்கொள்கை!

மதக்கலவரம் நடக்க விடாமல் தடுக்க சக்கர வியூகத்தை உருவாக்கியவர் தமிழ்நாடு முதலமைச்சர் என தமிழ்நாடு அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (06.12.2025) சென்னை எழும்பூரில் செய்தியாளர்களைச் சந்திப்பின் போது குறிப்பிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த பக்தர் நலன் பயக்கும் முக்கிய திட்டங்களில் ஒன்றான 'ராமநாத சுவாமி திருக்கோயில், ராமேஸ்வரம் காசி பயணம்' வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. நேற்று (06.12.2025) காலை, ராமேஸ்வரத்தில் இருந்து சென்னை எழும்பூர் வழியாக காசிக்கு 602 பக்தர்கள் பயணம் மேற்கொள்கின்றனர். நாளை இரவு காசி சென்றடையும் இப்பயணிகள் டிசம்பர் 12 அன்று காலை திரும்பி வருவார்கள்.

இப்பயணிகளின் பாதுகாப்பிற்காக இணை ஆணையர் ஒருவர், 5 உதவி ஆணையர்கள், 45 துறை அலுவலர்கள், 2 மருத்துவர்கள் மற்றும் 2 செவிலியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். பயணிகளுக்கு போர்வை, பற்பசை, தேங்காய் எண்ணெய், தலைவாரும் சீப்பு உட்பட 18 வகையான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இப் பயணத்திற்கு பயணி ஒருவருக்கு ஆகும் செலவு ரூ.27,500 ஆகும். இத்திட்டத்திற்கு மட்டும் தமிழ்நாடு அரசு இதுவரை 3 கோடியே 80 லட்சம் ரூபாயை மானியமாக வழங்கியுள்ளது.

### ஆன்மிகப் பயணத் திட்டத்திற்கு ரூ.4 கோடியே 64 லட்சம் மானியம்!

ராமேஸ்வரம் காசி பயணத்தில் இன்று வரை 1,520 பேர் பயனடைந்துள்ளனர். முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தொடங்கப்பட்ட 'ஆன்மீகப் பயணம்' திட்டத்தில் மொத்தம் 3,815 பேர் பயணம் செய்துள்ளனர். இத்திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு 4 கோடி 64 லட்சம் ரூபாயை மானியம் வழங்கியுள்ளது.



அடி மாத அம்மன் சுற்றுலா பயணத் திட்டதைச் சீரமைத்து அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் 3,004 சக்திகள் பயன்பெற்றனர். இதற்கான 75 லட்சம் ரூபாய் செலவை அரசே ஏற்றுள்ளது.

புரட்டாசி மாத வைணவ திருக்கோயில் பயணத்திட்டத்தில் 314 பேர் பயனடைந்திருக்கிறார்கள். இத்திட்டத்திற்கும் 75 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

"ஏழையின் சிரிப்பில் மட்டுமல்ல, மூத்தோரின் மகிழ்ச்சியிலும் இறைவனைக் காணும் அரசாக நாங்கள் செயல்படுகிறோம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் முக்திநாத் யாத்திரைக்கான மானியம் ரூ.20 ஆயிரத்திலிருந்து ரூ.30 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது, 645 பக்தர்கள் பயன்பெற்ற இத்திட்டத்திற்கு 1 கோடியே 19 லட்சம் ரூபாய் மானியம், மானசரோவர் யாத்திரைக்கான உதவித் தொகை ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.60 ஆயிரமாக உயர்த்தப்பட்டு கூடுதலாக 1 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது; ஆன்மீகப் பயணங்களின் ஒட்டுமொத்தமாக 11,998 பேர் பயனடைந்துள்ளனர், இதற்காக அரசு ஒதுக்கிய நிதி 11 கோடியே 13 இலட்சம் ரூபாயாகும்.

இந்த ஆட்சியில்தான் திருவிளக்கு பூஜை புனரமைக் கப்பட்டு, ஒவ்வொரு பௌர்ணமியிலும் 108 சுமங்கலிப் பெண் கள் பங்கேற்கும் வகையில் தொடங்கப்பட்டது. பூஜை செலவில் 20% மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இதுவரை 81,540 சுமங்கலிப் பெண்கள் இப்பூஜையில் பங்கேற்று வீடும் உள்ளமும் நலம்பெற பிரார்த்தித்துள்ளனர்.

### 4,000 கோயில்களுக்கு குட முழுக்கு!

மொத்தமுள்ள 2064 கோயில் குளங்களில் 450 குளங்கள் ரூ.120 கோடி செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன. 4 புதிய குளங்கள் வெட்டப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளன. 700 திருக்கோயில் தேர்களுக்கு பாதுகாப்பு கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன. வருகிற ஜனவரி மாத இறுதிக்குள் 4,000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி முடிக்கப்படும் என தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்ததாவது:–

### நீதிமன்றத் தீர்ப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன!

தமிழ்நாடு அரசு நீதி மன்றத்தின் உத்தரவுகளை மதிக்கிறது, சட்டப்பூர்வமாகவே செயல்படுகிறது. இன, மத மோதல்களைத் தடுப்பதே தமிழ்நாடு அரசின் குறிக்கோள். 1920, 1930, 1996, 2014, 2017 ஆகிய ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகள் அனைத்தும், 100 ஆண்டுகளுக்கும் மேலாக விளக்கேற்றப்படும் வழக்கமான இடத்திலேயே இந்நிகழ்வு நடக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

பக்தியை வைத்து பகை வளர்க்க கூடாது, சனாதனம் என்பதுதான் இறைக்கொள்கை சனாதனம் என்பதல்ல இறைக்கொள்கை. வடக்கில் இதுபோன்ற விரும்பத் தகாத சூழல்களை ஏற்படுத்தி அரசியல் மாற்றத்தை உருவாக்குவது போல தமிழ்நாட்டில் உருவாக்கலாம் என்று நினைக்கின்றார்கள். இது ராமானுஜர் வாழ்ந்த மண், எல்லோருக்கும் எல்லாமுமான மண். அதோடு மட்டுமல்ல ஒரு காலத்தில் வல்லபாய் படேலை இந்தியாவின் இரும்பு மனிதர் என்று போற்றுவார்கள். இன்றைக்கு இந்தியாவே உற்றுநோக்குகின்ற இரும்பு மனிதராக முதலமைச்சர் ஸ்டாலின் இருக்கிறார்; அவருடைய ஆட்சியில் பிரிவினை என்பது ஒருநாளும் எடுபடாது. பிரிவினை சக்திகள் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்படுவார்கள்.

### மக்களின் ஒற்றுமையை நிலைநாட்டுவார் முதல்வர்!

இது சட்டத்தின் ஆட்சி, சட்டத்திற்கு அடுத்தடுத்த கட்டங்கள் உள்ளன, இறுதிவரை இன,மத மோதல்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு என்ன முயற்சி வேண்டுமானாலும் இந்த அரசு எடுக்கும்; முதலமைச்சர் சட்டப்படியான போராட்டத்தை நடத்தி மக்களின் ஒற்றுமையை நிலைநாட்டுவார்.

இரு மதங்களுக்கு இடை யே மோதலை உருவாக்குகின்ற சூழ்நிலையை உருவாக்க நினைத்தார்கள் அது நடக்கவில்லை. அதை நடக்க விடாமல் தடுக்க சக்கர வியூகத்தை உருவாக்கியவர் தமிழ்நாடு முதலமைச்சர்.

பிறப்பால் வேண்டுமென்றால் மதங்கள் பிரிக்கப்படலாம், ஆனால் வாழ்க்கை நெறிமுறைகளில் மதங்களைப் பிரிக்க கூடாது. ஒரு தாய் மக்களாக தமிழ்நாட்டு மக்கள், முதலமைச்சர் அவர்களின் குடையின் கீழ் நிற்பார்கள்.

### மக்களைப் பிரிக்கும் சூழ்ச்சியாளர்கள் வெற்றிபெற மாட்டார்கள்!

கடந்த கார்த்திகை தீபத்திரு நாளன்று திருவண்ணாமலை உள்ளிட்ட 66 கோயில்களில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்றனர்; மக்களைப் பிரிக்கும் சூழ்ச்சியாளர்கள் வெற்றிபெற மாட்டார்கள்; நம் முன்னோர்களை ராஜராஜ சோழன், ராஜேந்திர சோழன் என்று பதிவிட்டு வரலாற்று ஆவணங்கள் எப்படி சொல்லுகிறதோ அதேபோல் 100 ஆண்டுகள் அல்ல 500 ஆண்டுகள் கழித்து பார்த்தாலும் 'மாண்புமிகு திராவிட மாடல் ஆட்சி உடைய நாயகன் எங்கள் உயிரினும் மேலான அன்பு தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்ற பெயர் பொறித்த வரலாறு இருக்கும்.

அதிமுகவின் இப்போது எடுக்கின்ற நிலைப்பாடுகள் அத்தனையும் டெல்லியில் இருந்து உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் என்ன சொல்லுகிறாரோ அதற்கேற்ற வகையிலேதான் எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் கொண்ட கொள்கைகளை அவர்கள் கொண்ட லட்சியங்களை காற்றில் பறக்கவிட்டுக் கொண்டிருக்கின் றார்கள்.

### பா.ஜ.க.வின் அடிமைகள்!

திருப்பரங்குன்றம் தீபம் ஏற்றும் நிகழ்ச்சியைப் பொறுத்தவரை 2014, 2017 ஆகிய இரண்டு காலகட்டங்களிலும் அதிமுக ஆட்சி தான் இருந்தது. அந்த ஆட்சியில் தீபத்தை இன்னொரு இடத்தில் ஏற்றுவதற்கு அனுமதி மறுத்து இவர்கள் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு அதை மறந்துவிட்டு இரண்டாம் இடத்திலும் தீபம் ஏற்றுவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று அறிக்கை விடுவது போலித்தனமானது, அவர்களுடைய கொள்கைகள், கோட்பாடுகள், லட்சியங்களை பாரதிய ஜனதாவிடம் அடிமை சாசனம் எழுதி தந்துவிட்டார்கள் என அ.தி.மு.க. குறித்த கேள்விகளுக்கு பதிலளித்தார்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு. கழக

# மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள் இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.கழக மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஆலந்தூர் கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் என்னுடைய (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்ட துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன், எம். எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞர் அணி மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று அவசியம் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**பொருள் :** வருகிற 14.12.2025 ஞாயிறு அன்று திருவண்ணமலையில் நடைபெற உள்ள வடக்கு மண்டல இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாட்டில் பங்கேற்பது குறித்தும் மற்றும் கழக வளர்ச்சி பணிகள்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**
செயலாளர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

# சென்னை வடகிழக்கு மாவட்ட பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (07.12.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில், மாதவரம், வி.ஆர்.டி. நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., (எனது) முன்னிலையில் நடைபெற உள்ளது.

மேலும் இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாதவரம் தொகுதி பார்வையாளர் ஜெ.அருண் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் டாக்டர் எஸ். மோகன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி பகுதி, ஒன்றிய, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:–** 14.12.2025 ஞாயிறு அன்று திருவண்ணாமலை மாவட்டம், கலைஞர் திடலில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றிட, கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு, தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள SIR பணிகள் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

மாதவரம் **எஸ்.சுதர்சனம்** எம்.எல்.ஏ.,
செயலாளர் சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.




பாபர் மசூதி இடிக்கப்பட்டதை நினைவுகூர்ந்து பயங்கரவாத எதிர்ப்பு நாள் எனும் பெயரில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அக்கட்சியின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான எம். எச்.ஜவாஹிருல்லா தலைமையில் எழும்பூர் தொகுதி, வார்டு எண்.61, புதுப்பேட்டை, லாங்ஸ் கார்டன் சாலையில் நடைபெற்ற கோரிக்கை போராட்டத்தில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் பங்கேற்று, மக்களின் வாக்குரிமை, வாழ்வுரிமை, வழிபாட்டு உரிமை உள்ளிட்ட அரசியல் சாசனத்தின் அடிப்படை விழுமியங்களை அழிக்க முயலும் சக்திகளைக் கண்டித்துக் கண்டன உரையாற்றினார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் டாக்டர் அம்பேத்கரின் நினைவு நாள் முன்னிட்டு மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ் தலைமையில் தி.மு.க.வினர் பேரணியாக சென்று டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## CSR நிதியில் ரூ.116 கோடி வரை முடக்கி வைத்திருக்கும்

# துறைமுகங்களால் கடலோர மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது!

## நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, டிச.7-

ஒன்றிய அரசின் 'சாகர் சாமஜிக் சஹயோக்' திட்டத்தில் தேக்கம் CSR நிதியில் 116 கோடி ரூபாய் வரை முடக்கி வைத்திருக்கும் துறைமுகங்கள் இது கடலோர மக்களுக்கு இழைக்கப்படும் அநீதி என எம்.பி. கே.இ. பிரகாஷ் கண்டனம் தெரிவித்துள்ளார்.



ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்வியின் மூலம், நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் தங்களின் CSR நிதியை கடலோர மக்களின் முன்னேற்றத்திற்கு செலவு செய்யும் 'Sagar Samajik Sahayog' திட்டம் தேக்கம் அடைந்திருப்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பல துறைமுகங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 78%, 80%, 52% வரை பயன்படுத்தப்படாமல் நிதியை முடக்கி வைத்திருக்கின்றன. மேலும், இதுவரை திட்டத்தின் பலனை அறிய எந்தவிதமான மதிப்பீடும் (Impact Assessment), ஆய்வும் (Review) செய்யப்படவில்லை. இது மீனவர் சமுதாயம் உள்ளிட்ட கடலோர மக்களின் நலனில் ஒன்றிய அரசு கொண்டுள்ள அலட்சியத்தையே காட்டுகிறது.

மக்களவையில் கே.இ. பிரகாஷ் எழுப்பிய கேள்விகள் வருமாறு:

a. ஒன்றிய அரசின் Sagar Samajik Sahayog வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து முக்கியத் துறைமுகங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

b. இந்த வழிகாட்டுதல்கள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து துறைமுகம் வாரியாக மேற்கொள்ளப்பட்ட முன்முயற்சிகள் மற்றும் முயற்சிகளின் விவரங்கள் என்ன?

c. இந்தக் காலகட்டத்தில் ஒவ்வொரு பெரிய துறை முகத்தாலும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட மொத்தச் சமூகப் பொறுப்பு நிதி எவ்வளவு?

d. 'Sagar Samajik Sahayog' வழிகாட்டுதல்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு ஏதேனும் மதிப்பீடு அல்லது ஆய்வு நடத்தப்பட்டுள்ளதா?

e. அவ்வாறு நடத்தப்பட்டிருந்தால், அந்த மதிப்பீடுகளின் விவரங்கள் மற்றும் முக்கிய கண்டுபிடிப்புகள் என்ன? அதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

**1. நிதியை முழுமையாக பயன்படுத்தாமல் இருப்பது கடலோர மக்களுக்கு இழைக்கும் அநீதி:**

இந்த திட்டத்தில், 2023-ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கப்பட்ட மொத்த நிதியில் சுமார் ரூ.116 கோடிக்கு மேல் பயன்படுத்தாமல் துறைமுகங்கள் முடக்கி வைத்துள்ளன. இது நியாயமாக, கடலோர மக்களின் கல்வி, சுகாதாரம், வாழ்வு மேம்பாட்டுக்காக பயன்பட வேண்டிய நிதி.

ஆனால், இவ்வளவு நிதியை எந்தவொரு காரணத்தையும் சொல்லாமல், துறைமுகங்கள் முடக்கி வைத்திருப்பது, கடலோர மக்களுக்கு இழைக்கும் அநீதி.

**2. மோசமாக செயல்படும் துறைமுகங்கள் மீது என்ன நடவடிக்கை?**

ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்களின் படி, விசாகப்பட்டினம் துறைமுகம் ஒதுக்கப்பட்ட நிதியில் 22% மட்டுமே பயன்படுத்தியுள்ளது. மும்பை துறைமுகம்: ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 20% பயன்படுத்தியுள்ளது. மிக அதிக அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கும் தீன்தயாள் துறைமுகம் 52% நிதியை மட்டுமே பயன்படுத்தியுள்ளது.

இது ஏற்றுக்கொள்ளவே முடியாதது. எத்தனை சமாதானங்களின் மூலமும், இவ்வளவு சதவிகித நிதி முடக்கத்தை நியாயப்படுத்த முடியாது.

இந்த நிதிக்கு உரிமை கொண்ட கடலோர மக்களின் கேள்வி ஒன்றே. இந்த துறைமுக நிர்வாகங்களின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ஒன்றிய அரசு?

**3. நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்து எந்த தகவலும் இல்லை!**

இந்த திட்டத்தில் துறைமுகங்கள் கடலோர மக்களுக்காக நிறைவேற்றியதாக சொல்லும் பணிகளைப் பற்றி, மதிப்பீடு (Impact Assessment) அல்லது ஆய்வு (Review) என்று எது குறித்த தகவல்களும் ஒன்றிய அரசு வழங்கவில்லை.

ஒவ்வொரு துறைமுகத்திலும் திட்டத்தின் பணிகளை கண்காணிக்க ஒரு CSR குழு உள்ளது என்று மட்டும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. ஆனால், வந்துள்ள பதிலின் படி, இந்தக் குழு செலவு செய்யும் நிதிக்கணக்கை மட்டும் கணக்கிடும் Audit வேலையை மட்டுமே பார்க்கிறது.

இந்த திட்டத்தின் விதிகளின் படி, CSR நிதியில் இருந்து 2% நிதியை நிறைவேற்றப்படும் பணிகளைக் கண்காணிக்க பயன்படுத்த வேண்டும். ஆனால், இந்த 2% நிதி இப்போது என்ன ஆகிறது? ஏன் பணிகளைக் கண்காணிப்பதில்லை?

**4. சென்னை காமராஜர் துறைமுகம் பற்றிய தகவல் இல்லை:**

நாட்டின் அனைத்து பெரிய துறைமுகங்களும் 'சாகர் சாமஜிக் சஹயோக்' வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றும் நிலையில், சென்னை காமராஜர் துறைமுகம் மட்டும் கார்ப்பரேட் விவகாரங்கள் துறையின் (Ministry of Corporate Affairs) வழிகாட்டுதல்களைப் பின்பற்றுகிறது. இதன் பின்னால் இருக்கும், நிர்வாகக் காரணங்களை புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால், 'சாகர் சமாக் சஹயோக்' என ஒரு முன்னெடுப்பை நாடு தழுவிய அளவில் அறிவிக்கும் போது, அதில் தென்னிந்தியாவின் மிகமுக்கிய ஒரு துறைமுகத்தை உள்ளடக்காததன் அர்த்தம் என்ன?

ஒன்றிய அரசு இந்த திட்டத்தில் உள்ள நிதி முடக்கம், பணிகள் குறித்து தகவல் வழங்காதது, மதிப்பீடு செய்யாதது, காமராஜர் துறைமுகத்தை உள்ளடக்காதது ஆகியவற்றை சரிசெய்து, கடலோர மக்களின் மேம்பாட்டிற்கு முழுப்பலனும் கிடைக்கும் வகையில் வழி செய்ய வேண்டும் என கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால் அவர்களின் பதில்:

(அ) காமராஜர் துறைமுகத்தைத் தவிர மற்ற அனைத்து முக்கியத் துறைமுகங்களிலும் வழிகாட்டுதல்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(ஆ) & (இ) 2023 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகள் குறித்த விவரங்கள் பின்னிணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஈ) & (உ) திட்டங்களின் திட்டமிடல், செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பைக் கவனிக்க ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒரு சமூகப் பொறுப்புக் குழு (CSR Committee) அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

## 8.12.2025 மாலை 4.00 மணியளவில், மதுரையில்

# "மதச் சார்பின்மை" எனும் தலைப்பில் "கருத்தரங்கம்"

### "மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி" கட்சிகளின் வழக்கறிஞர் அணி சார்பில் நடைபெறுகிறது

வருகிற 08.12.2025 திங்கட்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில், மதுரை பாண்டி கோவில் பின்புறம், நான்கு வழி சாலை, பாண்டியன் நகர், கதவிலக்கம் 27/7 மற்றும் 27/8 ல் அமைந்துள்ள 'துவரகா பேலஸில்' 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' கட்சிகளின் வழக்கறிஞர் அணி சார்பில் "மதச் சார்பின்மை" என்ற தலைப்பில் "கருத்தரங்கம்" நடைபெறும்.

இதில் தி.மு.கழகத்தின் சார்பில் அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி – காங்கிரஸ் கட்சியின் சார்பில் வழக்கறிஞர் ஆர். மாரியப்பன் ம.தி.மு.க. சார்பில் வழக்கறிஞர். இரா.செந்தில் செல்வன் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எஸ்.பாரதி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வழக்கறிஞர் கே. கே.சாமி – விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வழக்கறிஞர். த.பார்வேந்தன் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

இக்கருத்தரங்கில் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் – தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

**மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி**
**வழக்கறிஞர் அணி**




சென்னை ரோட்டரி சங்கத்தின் சார்பில் சைதை மேற்கு பகுதி 142வது வார்டில் டிட்வா புயல் மழையின் காரணமாக வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் அடையாறு ஆற்றங்கரை ஒரத்தில் வசிக்கும் மக்களுக்கு அரிசி, மளிகை பொருட்களை நிவாரணமாக சங்க நிர்வாகிகளுடன் இணைந்து சைதை மேற்கு பகுதி செயலாளர், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வழங்கினார். உடன் பொதுக்குழு உறுப்பினர் களக்காடிஎல்லப்பன், பகுதி துணை செயலாளர் ஆர்.ரமேஷ், வட்ட செயலாளர் எம்.நாகா உள்ளிட்ட கழக தோழர்கள் பெருதிரளராக பங்கேற்றனர்.